Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

மலர் 7 யாழ்ப்பாணம் புதன் மாசி 6 ஆம் நாள் ஷவ்வால் பிறை 14 (17-2-65) புதன்கிழமை இதழ்

லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

1965-ம் ஆண்டு கலண்டர் உங்கள் இல்லம் காரியாலயம், பொது நிலையங்களில் இருக்கின்றதா? இல்லையேல் உங்கள் அருகாமையிலுள்ள வியாபாரியிடம் கேட்டு வாங்கவும்.

அல்லது

செ. ஆ. செ. கம்பெனியில் கேட்கவும்

110, ஆஸ்பத்திரி வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

வினோபா உண்ணாவிரதம் நீடிக்கப்பட்டது!

ராஜினாமா கடிதங்களை வாபஸ் பெற்றனர்

புதுடில்லி, செப். 16

தமிழ் நாட்டிலும் மற்றும் சில பகுதிகளிலும் நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்பு கிளர்ச்சி காரணமாக கடந்த வியாழக் கிழமை ராஜினாமா செய்த இந்திய மத்திய மந்திரிகளான திரு. சி. சுப்பிரமணியம், திரு. அழகேசன் ஆகிய இருவரும் இன்று தங்களது ராஜினாமாவை வாபஸ் பெற்றுக் கொண்டனர்.

இந்தியாவின் உத்தியோக மொழிக் கொள்கை காரணமாக ராஜினாமா செய்த இவ்விரு மந்திரிகளும், இன்று பிரதமர் சாஸ்திரியை தனித் தனியாகச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர். இதன் பின்னர் தங்களது ராஜினாமா கடிதங்களை வாபஸ் பெற்றுக் கொண்டனர்.

நல்லூரடியில் பஸ்-கார் மோதல்

இருவருக்கு காயம்

காங்கேசன்துறை, செப் 16

நல்லூரடியில் இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ் ஒன்றும், கார் ஒன்றும் மோதியதால் பஸ்சில் இருந்த இரு பிரயாணிகளான க. சுப்பிரமணியம், த. தங்கவேலு ஆகிய இருவரும் யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். மற்றும் பிரயாணிகள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். பஸ்ஸும் காரும் பலத்த சேதத்துக்குள்ளாகியது.

சைக்கோனில்

சைக்கோன், செப். 16

சைக்கோனில் புதிய சிவிலிய அரசாங்கம் இன்று அமைக்கப்பட்டது.

"கடவுளிடம் என்னை ஒப்படைத்து விட்டேன்" என்கிறார்

ஆந்திரபிரதேச சம்பவத்தின் விளைவு

வார்தா, செப். 16

பூதானத் தலைவர் ஆச்சார்ய வினோபாபாவே தனது உண்ணாவிரதத்தை நீடிக்க முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்று அவர் உண்ணாவிரதத்தைக் கைவிடுவார் என முன்பு எதிர்பார்க்கப்பட்டது.

தென்னாட்டில் மொழி விஷயமாக ஏற்பட்ட பலாத்காரச் சம்பவங்கள் நிற்கும் வரை உண்ணாவிரதமிருக்க வினோபாஜி முடிவு செய்தார். கடந்த வெள்ளிக்கிழமை முதல் இன்றுவரை 5 நாட்களாக அவர் உண்ணாவிரதமிருந்து வருகிறார்.

தமிழ்நாட்டில் அமைதி ஏற்பட்டுவிட்டதால் உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு மேற்று பல தலைவர்கள் அவரைக் கேட்டுக் கொண்டனர். ஆனால் இதை அவர் மறுத்து மேலும் ஒருநாள் வானொலிச் செய்தியையும், பத்திரிகைச் செய்தியையும் பார்த்தபின்பே உண்ணாவிரதத்தைக் கைவிடப் போவதாய்க் கூறினார். துரதிருஷ்டவசமாக நெல்லூரில் ஏற்பட்ட ஆர்ப்பாட்டங்களும் துப்பாக்கிப் பிரயோகமும் வானொலியிலும், பத்திரிகையிலும் இன்று அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட பலாத்காரச் சம்பவங்கள் இப்போது அங்கிருந்து ஆந்திரப் பிரதேசத்துக்கு மாறிவிட்டதாயும் எனவே தமது உண்ணாவிரதத்தை நிறுத்தப் போவதில்லை என்றும் ஆச்சார்யா வினோபாஜி விடுத்த அறிக்கையில் கூறினார்.

"என்னைப்பற்றி எவரும் கவலைப்பட வேண்டாம். கடவுளிடத் என்னை ஒப்படைத்து விட்டேன்" என்றும் ஆச்சார்யா கூறினார்.

பலவீனமடைந்திருக்கும் வினோபாபாவை இன்று திரு. ஆர். ஆர். திவாகர், திரு. காலேல்கர் ஆகியோர் சந்தித்தனர்.

பல்கலைக்கழக பரீட்சை ஒத்திவைப்பு

சென்னைப் பல்கலைக் கழக பரீட்சைகள் ஏப்ரல் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஹிந்தி கிளர்ச்சி காரணமாக இம்மாதம் முடிவு வரை தமிழ்நாட்டில் சகல கல்லூரிகளும் மூடப்பட்டிருப்பதே மேற்படி பரீட்சைகள் ஒத்திவைக்கப் பட்டிருப்பதற்குக் காரணம் என அறிவிக்கப்படுகிறது.

எக்ஸ்பிரஸ் பஸ் சேவைகள் ஒருவார காலம் நடைபெற

(6-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாண மாவட்டத்தில் 200 வானொலிகள் விநியோகம்

யாழ்ப்பாணம், புதன்

அரசாங்கத்தால் வழங்கப்படவிருக்கும் 'டெலிபங்கள்' வானொலிப் பெட்டிகளைப் பெற விரும்பும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கிராம முன்னேற்றச் சங்கங்களும், சனசமூக நிலையங்களும் தங்கள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி இன்றாகும்.

அண்மையில் அரசாங்கத்தினால் தருவிக்கப்பட்ட வானொலிப் பெட்டிகளை மின்சார வசதியுள்ள இடங்களிலுள்ள கிராம முன்னேற்ற, சனசமூக நிலையங்களுக்குமட்டுமே மாதத் தவணை முறையில் வழங்குவதென முடிவு செய்யப்பட்டிருந்ததெனினும், பின்னர் பொதுமக்களால் பாவிக்கப்படும் சகல சனசமூக, கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கும் வானொலிகளை வழங்குவதென அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இதைத் தொடர்ந்து சகல மாவட்டங்களிலும் விண்ணப்ப திகதி பின்போடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கிராம முன்னேற்ற, சனசமூக நிலைய சங்கங்கள் இம்மாதம் 18 ந் திகதிக்கு முன்னர் அரசாங்க அதிபருக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் விண்ணப்பங்களை அனுப்பவேண்டும். இந்நிலையங்களை பொதுமக்கள் தக்க முறையில் பயன்படுத்திவருகிறார்கள் என்பதை கிராமசேவகரிடமிருந்தும் வேண்டுமானால் உள்ளூராட்சி மன்றத் தலைவரிடமிருந்தும் அத்தாட்சிப்பத்திரங்கள் விண்ணப்பங்களுடன் இணைக்கப்படவேண்டும்.

இலங்கை பூராவும் உள்ள சகல கிராமமுன்னேற்ற, சனசமூகநிலையங்களுக்கும் விநியோகிக்கக்கூடியவகையில் இப்பொழுது வானொலிப் பெட்டிகள் ஏராளமாய் இருப்பதாக இதுசம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து அறி

(6-ம் பக்கம் பார்க்க)

139 மாணவர்மீது குற்றப்பத்திரிகை

சென்னை, செப். 16

வன்முறைச் செயல்களில் ஈடுபட்டதற்காக இன்று சென்னையில் 139 மாணவர்கள் மீது [illegible] குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். கடந்த மாதம் 27-ந் திகதி மாணவர்கள் ஆர்ப்பாட்ட நடவடிக்கையில் ஈடுபட்டதற்காக 60 மாணவர்கள் மீதும், இம்மாதம் 10-ந் திகதி சென்னையில் தபால் நிலையம் முன் மறியல் செய்ததற்காக 79 மாணவர்கள் மீதும் சென்னை நகரப் பொலிசார் இன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர்.

கேள்விப்பத்திர அறிவித்தல்

பரந்தன் இரணைமடு மேற்கு ப. நோ. கூ. சங்கத்திற்கு இரு நெற்கிட்டங்கிகள் கட்டுவதற்கான கேள்விப் பத்திரங்கள் புலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்தும் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25-ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை எனது அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். இரு கட்டிடங்களுக்கும் தனித்தனி கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் "நெல் கிடங்கிக்கான கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும் யாழ்ப்பாணக் கூட்டுறவு மாகாண வங்கியின் பரந்தன் கிளையின் ஒவ்வொரு கட்டிடத்துக்கு ரூபா 50-00 கேள்விப்பத்திர வைப்புப் பணமாகக் கட்டப்பெற்ற பற்றுச்சீட்டு காண்பிப்பதன்பேரில், பரந்தன் தென் யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ம் திகதி காலை 10 மணிவரையும் கேள்விப்பத்திரப்படிவங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். கட்டிடங்களின் மாதிரிப் படத்தையும், செலவின விபரத்தையும், எனது அலுவலகத்தில் பார்வையிடலாம். இவ்வேலையை ஏற்றுக் கொள்ளத் தகுதியுடையவர்கள் என்பதற்குப் போதிய அத்தாட்சி காண்பிப்பவர்களுக்கே இதற்குரிய பத்திரங்கள் வழங்கப்படும். தெரிவு செய்யப்பெற்ற கேள்விப்பத்திரக்காரர் தாம் ஒப்புக்கொண்ட ஒப்பந்தத் தொகையில் 5 விதத்தை பிணைப்பணமாகக் கட்ட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பெற்ற இரண்டு வாரங்களுக்குள் வேலையை ஏற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

மேலதிக விபரங்களை தென்-யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கூட்டுறவு அலுவலகம், பரந்தன். 6-2 65.

(ஒப்பம்) மு. சின்னத்தம்பி,
தென்-யாழ்ப்பாணம் கூட்டுறவு
அபிவிருத்தி உதவி ஆணையாளர்.

1602

'வெற்றி முரசு'
(வார இதழ்)
வெள்ளிக்கிழமை (19-2-65)
முதல் வெளிவருகின்றது.
விலை சதம் 10 1618

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது நாட்டுக்கு

உண்மை ஜனநாயகம் பற்றி என் கருத்து என்ன வெனில், மிக பலவீனருக்கும் மிக பலவான்களுக்கு முள்ள சம சந்தர்ப்பம் அம்முறையிலே இருக்க வேண்டும். எதிர்ப்பாளர் பலாத்காரத்தால் ஒழித்தோ அடக்கியோ ஏற்படுத்தும் "ஜனநாயகம்" மக்களின் தனிப்பட்ட சுதந்திரத்தை மறுப்பதாகும்.

—மகாத்மா காந்தி.

ஈழநாடு

BELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'BELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மாசி மீ 6 உ (17-2-65)

மொழியும் தேர்தல் விஞ்ஞாபனமும்

ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனங்களில், தமிழ்பேசும் மக்களின் கவனத்தை முதலில் ஈர்ப்பது மொழிப்பிரச்னை பற்றி அவ்விரு முக்கிய கட்சிகளும் என்ன கூறுகின்றன வென்பதேயாம்.

மூன்று வாரங்களுக்கு முன்பாக ஐக்கிய தேசியக்கட்சி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவ்விஷயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:- "சிங்களமே நாட்டின் உத்தியோக மொழியாக இருக்குமென்ற அமைப்புக்குள் நாட்டை ஒற்றுமைப் படுத்துவதற்கான வழிவகைகளைப் பற்றி விவாதிக்க ஒரு வட்டமேஜை மகாநாட்டைக் கூட்ட ஐ. தே.கட்சி உறுதி கூறுகின்றது. சிங்களத்தையே பெரும்பாலான மக்கள் பேசுவதால் அதையே உத்தியோக மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டியது இயற்கையே. உத்தியோக மொழி தெரியாத எந்தப் பிரஜைக்கும் எவ்வித பாதகமும் ஏற்படாத முறையில் தமிழ் மொழி உபயோகத்துக்கு வழி செய்யப்படும்."

இதே விஷயமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் தன் தேர்தல் விஞ்ஞாபனத்தில், "அரசாங்க மொழிச் சட்டத்தையும், தமிழ் மொழி (விசேஷ உபயோக) சட்டத்தையும் சிங்களவர், தமிழர் இவ்விரு சாராரும் ஒப்புக் கொள்ளக் கூடிய முறையில் பூரணமாக அமுல் நடத்த நடவடிக்கைகள் எடுத்து, இவ்விரு சமூகங்களுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தப் போவதாக" தெரிவித்துள்ளனர்.

மொழிப் பிரச்னை தீர்ந்து விட்டதாக இருகட்சியினரும் கூறவில்லை. இதற்கு மாறாக, அப்பிரச்னை இன்னும் தீரவில்லை என்பதையும், இதனால் சமூக நல்லுறவும் தேசிய ஒற்றுமையும் பாதிக்கப்பட்டுள்ளதென்பதையும், இதை நல்லபடியாகத் தீர்க்க வேண்டியது அவசியமென்பதையும் பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். அந்த மட்டில் இவை வரவேற்கத்தக்கனவே.

வேறு விஷயங்களில் இவ்விரு கட்சிகளுக்கும் வேற்றுமை இருப்பினும் மொழிப்பிரச்னை விஷயத்தில் ஆதிமுதல் ஒற்றுமை இருந்து வருகின்றது இருகட்சிகளும் சேர்ந்தே தனிச் சிங்கள சட்டத்தையும், தமிழ் மொழி (விசேஷ உபயோக) சட்டத்தையும் நிறைவேற்றின என்பது குறிப்பிடத்தக்கதாகும். "நாட்டின் ஒற்றுமையை ஏற்படுத்த வட்டமேசை மகாநாடு கூட்டுவதாக ஐ. தே. கட்சி கூறுகையில், மக்களின் தேவைக்கு உகந்த முறையில் அரசியல் அமைப்பைத் திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அறிவிக்கின்றது.

இலங்கையிலே இப்போது உள்ள சோல்பரி அரசியல்திட்டம் மக்களால் ஆக்கப்பட்டதன்று. இந்தியாவைப்போல் அரசியல் நிர்ணயசபையை இங்கு கூட்டவில்லை. அப்படிக்கூட்டியிருப்பின் முக்கியமான மொழிப் பிரச்னையும் அதன்மூலம் இரு சமூகத்தினரும் ஒப்புக் கொள்ளக்கூடிய விதத்தில் தீர்மானித்திருக்கலாம். அரசியல் அமைப்பைத் திருத்தி அமைக்கப் போவதாக பல்லாண்டுகளாகக் கணிக்கப்பட்டு விசேஷ கமிட்டியும் கூட்டப்பட்டது. ஆனால் கண்ட பலன் ஒன்றுமில்லை. வட்டமேஜை மகாநாடோ, அரசியல் நிர்ணய சபையோ கூட்டுவதாயின், அதில் மொழிப் பிரச்னையையும் அடியோடு புனராலோசனை செய்து சமூகமான முடிவைச் செய்ய வேண்டும். இப்போதைய மொழிச்சட்டத்தில் ஆங்கிலத்துக்கு இடமளிக்கப்படவில்லை. "நியாயமான உபயோகம்" என்பது பற்றி சட்டமூலம் திட்டமான விளக்கம் இல்லாததால் ஒவ்வொரு அதிகாரியும் தனிச்சிங்களச் சட்டத்தை தம் இஷ்டம்போல் அமுலுக்குக் கொணர்ந்து, சிங்களம் தெரியாத மக்களுக்கு ஆத்திரமூட்டி, அரசாங்கத்துக்கும் கெட்டபெயர் ஏற்படுவதாகவுள்ளது.

தமிழ் மொழிக்கு சட்டபூர்வமான சமஅந்தஸ்து வேண்டுமென்று தமிழ் மக்கள் கேட்பதற்கு அடிப்படைக் காரணம், அது அவர்களது சமூக மானத்தையும் கௌரவத்தையும் பற்றியதால்தான். இந்த உணர்ச்சியை அனுதாபத்துடன் உணர்ந்து அதற்குத் தக்கபடி மொழிச் சட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டும். இங்கு தமிழர் புதிதாக ஒன்றும் கேட்கவில்லை. ஏற்கெனவே சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டு, 1956-ம் வருடம் வரை அமுல் செய்யப்பட்டும் வந்துள்ளன. அதை அவசரப்பட்டு ஒரு தலைப்பட்சமாக மாற்றியதால் தான் நாட்டில் சமூக ஒற்றுமையும் அமைதியும் குலைந்தன. இப்போது தேர்தல் காலத்தில் இதை இவ்விரு கட்சிகளும் வெளிப்படையாகக் கூறத் தயங்கினாலும் இந்த உண்மையை இவ்விரு கட்சிகளும் நன்கு உணரவே செய்யும். நாட்டில் சமூக நல்லுறவும் ஒற்றுமையும் ஏற்பட வேண்டும் என்ற ஆர்வம் இக்கட்சிகளுக்கு உண்மையில் இருப்பின், தேர்தல் முடிந்ததும் அரசியல் நிர்ணயசபை கூட்டி, இப்பிரச்னையை, அதன்மூலம் சமூகமாகத் தீர்த்துக்கொள்ள முற்படுவதே சரியான வழி. ஒப்புடியும் ஏற்கெனவே நிறைவேறிய மொழிச் சட்டங்களை ஒரு தலைப்பட்சமானவையே; அவை முடிந்த முடிபல்ல.



எங்கள் ஹம்ஸர்

கங்கை பாயுந் தேனாட்டில்
கவினே அமைந்த வங்கத்தில்
தங்கம் நிகர்த்த குணத்தாலே
தரணி மக்கள் நெஞ்சினிலே
மக்கள் கீதம் முழங்கிடவே
மறையோன் மாண்பைத் துலக்கிடவே
எங்கள் ஹம்ஸன் வந்துதித்தான்
ஏற்றந் தன்னைத் தோற்றுவிதான்.
அன்றே இறைவன் உருவென்றான்
அதுவே வாழ்வின் திருவென்றான்
துன்பந் தன்னை நீக்கிடவே
தூய்மை நெஞ்சிற் தேக்கிடவே
அன்பா விறைவன் தாளினையே
அனுதினம் விரும்பிப் போற்றிடுவோம்
என்ற வழியைக் காட்டிட்டான்
எழிலை வாழ்விற் கூட்டிட்டான்.

கோடி மதங்கள் இருந்தாலும்
கொள்கை பலவே இருந்தாலும்
நாடி நதிகள் கடலினையே
நாடி ஓடிச் சேர்ந்ததுபோல்
கோடி மதங்கள் இருந்தென்ன
கொள்கை பலவே இருந்தென்ன
பாடி நாங்கள் பணிந்திடுவோம்
பரமன் ஒருவன் எனச்சொல்லி.

எங்கள் இதயம் தன்னிலே
ஏற்றந் தன்னைத் தோற்றுவித்தே
திங்கள் தன்னின் ஒளிகண்டு
திருவாய் அல்லி மலர்வதுபோல்
மங்கள போதனை பலசெய்து
மாண்பால் எம்மைக் கவர்ந்தவனே
வாழிய எங்கள் நினைவினிலே
வாழிய ஹம்ஸா வாழியவே!

—பாரதி முருகதாஸன்

ஆசிரியருக்குக் கடிதங்கள்

பொதுத்தேர்தலும் ஸ்ரீ நேருவும்

இலங்கையில் பொதுத் தேர்தல் அண்மித்துவிட்டது. இந்த நேரத்தில் இந்தியாவில் நடைபெற்ற தேர்தல் பற்றி, மைக்கல் பிறட்சர் தாம் எழுதிய ஸ்ரீ நேருவின் வாழ்க்கைச்சரித்திரத்தில் குறிப்பிட்டுள்ளது இலங்கைக்கு வழிகாட்டுவதாக இருக்கும்.

"தேர்தல் அலுவல் சம்பந்தப்பட்ட மேற்பார்வை, கண்காணிப்பு, வாக்காளருக்கு வழிகாட்டுதல் முதலியவற்றை பாரபட்சமின்றி நடத்துவதற்கென சுயேச்சையான தேர்தல் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டது. இவர்களின் பதவிக்காலம் சுப்பிரீம்கோர்ட் நீதிபதிகளின் பதவிக்காலத்துக்கு ஒப்பானதுடன் இவர்களை ஜனாதிபதியே நியமிப்பார். இந்தக் கமிஷனுக்கு உதவியாக ப்ரவட்ட தேர்தல் கமிஷனர்கள், ராஜ்யங்களுக்கென பிரதம தேர்தல் உத்தியோகத்தர்கள், தேர்தல் பதிவு காரியஸ்தர்கள், வாக்களிப்பு மேற்பார்வை அதிகாரிகள் ஆகிய உத்தியோகத்தர்கள் ஆயிரக்கணக்கில் நியமிக்கப்பட்டனர்.

தேர்தல் எவ்வித அரசியல் தலையீடுமின்றி நடைபெற்றது. காங்கிரஸ் அரசாங்கத்துக்கே பெருமையளிப்பதாய் இருந்தது. காங்கிரஸுக்கு ஏதோ இடர்நேர்ந்ததாக கூறி தேர்தல் பிற்போடுமாறு அவரது சகபாடி ஒருவர் கேட்டதாகு இடுபொழுது தேர்தல் தேதியை பின்போடுவது என்பது முடியுமான காரியமல்ல எத்தனையோ கஷ்டங்களுக்குப் பின்னரே தேர்தல் திகதி நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது தேர்தல் கமிஷனரின் கையில் உள்ளது. அரசாங்கம் இதில் தலையிடமாட்டாது" என்று நேரு பதிலளித்தார்.

தேர்தலை ஒத்திப்போடுமாறு கேட்ட தமது சகபாடியை நோக்கி நேரு மேலும் குறிப்பிட்டதாவது:- "எதிர்வரும் தேர்தல் எங்களுக்கு மிகவும் முக்கியமானது. ஆனால் நாம் எதற்காகப் பணியாற்றுகிறோம், எதிர்காலத்தில் அது எவ்விதம் செயலாற்றவேண்டும் என நாம் எண்ணுகிறோம் என்பதை அறிந்து கொள்வது மூன்னையதைவிட அதிமுக்கியமானதாகும். பிழையான வழிகள் மூலம் பிழையான முறையில் தேர்தலை வெற்றியிட்டுவதைவிட தோற்றுக்கொண்டு உயிருடன் தப்பி விருப்பதே மேல்."

கடைசிமுறையாக ஸ்ரீ நேரு இலங்கைக்கு விஜயம்செய்த போது பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையும் ஜனநாயக எண்ணங்களுக்கு பெரிதும் உதவுவதாக உள்ளது. இலங்கையின் உற்ற நண்பனான, உலகப் பிரசித்திபெற்ற ராஜதந்திரியான ஸ்ரீ நேருவின் கொள்கைகளையும், நடைமுறைகளையும் கவனித்து அதன்படி நடக்க எமது நாட்டில் உள்ள அரசியல்கட்சித் தலைவர்கள் முற்படுவார்களானால் அவர்கள் நமக்கு நற்சேவை செய்தவராவர்.

எஸ். சிவசுப்பிரமணியம்
கொழும்பு.

ஐயாறன் எழுதுவது

இப்போது ரயிலிலே தாங்க முடியாத கூட்டமாம். இங்கு ஒரு நாளைக்கு 200 ரூபாயும் வசூலாகாத ஒரு ஸ்டேஷனில் 1000 ரூபாய்க்கு மேலும் டிக்கெட் விற்பனையாவதாயும், கொழும்பில் நடக்கும் கைத்தொழில் கண்காட்சியைப் பார்ப்பதற்கே இவ்வளவு கூட்டமென்றும் இவ்வளவு நெருக்கத்தைத் தாம் இதுவரை கண்டதேயில்லை என்றும் ரயில்வேயில் பெரிய பதவிவகித்து ஓய்வுபெற்ற ஓரன்பர் தெரிவிக்கிறார்.

நேற்றுக் காலை கொழும்பிலிருந்து ரயிலில் வந்த மற்றோரன்பர் முதல்நாளே வரவிருந்தாராம், ஆனால் ரயிலில் நிற்கவும் இடமில்லாததைக் கண்டதும் இறங்கி மறு வண்டியில் ஒருவிதமாக வந்துசேர்ந்ததாகத் தெரிவித்தார். இக்காட்சி காரணமாக ரயில் வேக்கு நல்ல வருமானம். ஆனால் பிரயாணிகளின் வசதியை ரயில்வே நிர்வாகமும் அரசாங்கமும் கவனித்ததாகத் தெரியவில்லை.

கைத்தொழில் காட்சியைத் தாக்கி சில கொழும்புப் பத்திரிகைகள் தலையங்கம் தீட்டினாலும் பொதுமக்கள் இக்காட்சியைப் பார்க்கத் திரண்டு செல்லுகின்றனர். கொழும்புத் திட்டக் காட்சியைவிட இது மட்டம் தான் என்றாலும் மக்கள் அங்கு எப்படியாவது சென்று பார்க்கவே ஆவலுடன் விரும்புகிறார்கள். ரயில் வேக்கும் காட்சிச்சாலைக்கு நல்ல அதிர்ஷ்டம் தான்.

என்றாலும் பிரயாணிகளின் நன்மையைக் கருதி காட்சிக்காக ஸ்பெஷல் ரயில்களை விட வேண்டும். ஏழைகளும் சென்று பார்க்கமுடியுமாறு ரயில் கட்டணச் சலுகைகளை அளிக்கவேண்டும்.

* * *

அங்கு "கிரகமண்டல கூட்"டத்தை இப்போது திறந்துவிட்டனராம். அதைப் பார்க்கப் பல்லாயிரக்கணக்கில் கூட்டம் செல்லுகின்றது. என்றாலும் இதைப்பற்றி அவசரப்படத் தேவையில்லை. காட்சி முடிந்தாலும் அந்தக் கிரகக் கூடமும் இலங்கைக் காட்சிச்சாலையும் இனி எப்போதும் இருக்குமெனத் தெரிகிறது. இவ்விரண்டும் பலமான 'காங்கிரீட்'டால் பெரும் செலவில் கட்டியுள்ளனர். ஆகவே சாவகாசமாகச் சென்று பார்க்கலாம். இதற்காகக் கூட்டத்தில் சங்கடப்படத்தேவையில்லை.

* * *

வடக்கிலும் கிழக்கிலும் நல்ல மழை பெய்திருக்கையில் தென் மாகாணத்திலே இன்னும் அதிக வரட்சியாக இருப்பதாயும் மழையே இல்லையென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஏன் இப்படி? திருகோணமலையில் ஒன்பது அங்குல மழையாம்! யாழ்ப்பாணத்தில் நாலரை, காங்கேசன்துறையில் நாலரை வவுனியாவில் இரண்டு, மட்டக்களப்பில் இரண்டு அங்குல மழை. இங்கெல்லாம் குடிதண்ணீர் பஞ்சமிராது.

இந்த மழை யாழ்ப்பாணத்துக்கு மிக நல்லதென்றும், தாமதித்து விதைத்த பயிர்கள் தப்பிவிடுமென்றும் ஓரன்பர் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார்.

* * *

இந்தியாவிலே டிசம்பர் மாதத்தில் எழுதிய தபால்களும் அம்மாதத்து சஞ்சிகைகளும் இப்போதுதான் ஆமை வேகத்தில் இங்கு தபாலில் வருகின்றன. சூறாவளியால் தனுஷ்கோடி பாதை தகர்ந்ததென்றாலும் தபால்களை உடனுக்குடன் பட்டுவாடா செய்ய வேறு ஒழுங்கு செய்ய முடியாதா? ஏன் இரு அரசாங்கங்களும் இவ்வளவு

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆந்திரபிரதேசத்தில் ஆர்ப்பாட்டம்

ஹிந்தி எதிர்ப்பாளர்கள்மீது பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம்

இருவர் பலி; மூவருக்குக் காயம்

புதுடில்லி, பெப். 16

நெல்லூரில் நேற்று பொலிசார் இரு இடங்களில் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் மாண்டனர். மூவர் காயமடைந்தனர். அங்கு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு ஒரு ரயில்வே நிலையத்தை எரித்து, மற்றொன்றை நாசமாக்கினர். ஒரு பிரயாணிகள் ரயில் நொருக்கப்பட்டது.

ஹர்த்தால்

நேற்று நெல்லூரில் ஹர்த்தால் நடைபெற்றது. பஸ்கள் ஓடவில்லை. பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை. இச்சம்பவத்தின் விளைவாக சில ரயில்போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டன.

மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

காக்கினாடாவில் நேற்று மாணவர்கள் ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். வகுப்புகளை அவர்கள் பகிஷ்கரித்தனர்.

கர்னூலிலும் மாணவர்கள் ஆர்ப்பாப்பங்களும், ஊர்வலங்களும் நடத்தினர்.

ரெட்டி வேண்டுகோள்

ராஜ்யத்தின் நற்பெயரைக் கெடுக்க வேண்டாம் என ஆந்திர பிரதேச முதன்மந்திரி திரு. பிரம்மானந்தரெட்டி கேட்டுக் கொண்டிருக்கிறார்.

கல்கத்தாவில் ஆர்ப்பாட்டம்

கல்கத்தாவிலும் மாணவர்கள் நேற்று இரு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

மத்திய அரசாங்கம் ஆட்சிமொழிக் கொள்கையைப் புனராலோசனை செய்ய வேண்டும் என அவர்கள் வற்புறுத்தினர்.

வினோபாஜி உடல்நிலை

கடந்த வெள்ளிக்கிழமை முதல் உண்ணாவிரதம் இருந்து வரும் ஆச்சார்யா வினோபாபாவேயை (நேற்று 4-வது தினம்) டாக்டர்கள் பரிசோதித்தனர். பொதுவான உடல்நிலை சீராக இருப்பதாயும், தேகநிலை பலவீனமாய் இருப்பதாயும் அவர்கள் கூறினர்.

காமராஜ்

புதுடில்லியில் பிரதம மந்திரி திரு. சாஸ்திரி திரு. காமராஜரைச் சந்தித்து நீண்டநேரம் மொழிப் பிரச்னை பற்றி ஆலோசனை நடத்தினார்.

உள்நாட்டு மந்திரி திரு. நந்தாவும் காமராஜரைச் சந்தித்துப் பேசினார்.

நேற்று டில்லி திரும்பிய நந்திரி சுப்ரமண்யம் விடுத்த அறிக்கையொன்றில் பல ராஜ்யங்களிலுமுள்ள பாராளுமன்ற அங்கத்தினர்கள் தென்னிந்தியாவுக்கு விஜயம் செய்து அங்கு நிலவும் தப்பபிப்பிராயங்களைப் போக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

தேசிய மகாநாடு

மொழிப் பிரச்னை பற்றி ஆராய கல்விமான்களும், பிரபலமான அரசியல்வாதிகளும் கொண்ட ஒரு தேசிய மகாநாடு நடைபெறவிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

சாஸ்திரி விலக வேண்டும்

மொழிப்பிரச்னை காரணமாக பிரதமர் சாஸ்திரி ராஜிநாமாச் செய்ய வேண்டும் என சோஷலிஸ்ட் தலைவர் டாக்டர் ராம் மனோகர் லோகியா கூறியிருக்கிறார்.

40 பேர் பலி!

சைகோன், பெப். 16

சைகோனுக்கு 450 மைல் தூரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றைக் கலைக்க துருப்புக்கள் சுட்டதில் 40 பேர் மாண்டனர்.

பட்டோடி காப்டன்

புதுடில்லி, பெப். 16

இந்தியாவுக்கும் நியூஸிலாந்துக்குமிடையேயான 4 கிரிக்கெட் போட்டிகளிலும் இந்தியக் கோஷ்டியின் காப்டனாக பட்டோடி நவாப் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். முதல் டெஸ்ட் வருகிற 27-ம் திகதி சென்னையில் ஆரம்பமாகும்.

கெய்ரோவில் ஜோர்டான் மன்னர்

கெய்ரோ, பெப். 16

ஜோர்டான் மன்னர் ஹுஸெய்ன் நேற்று ஜனாதிபதி நாஸருடன் பேச்சு நடத்துமுகமாக கெய்ரோ வந்து சேர்ந்தார்.

இந்தோனேஷியாவுக்கு யு. எஸ். ஆட்சேபம்

வாஷிங்டன், பெப், 16

ஜாகர்த்தாவிலுள்ள அமெரிக்க கலாச்சார நிலையத்தை அரசாங்கம் மேற்கொண்டது குறித்து இந்தோனேஷியாவுக்கு அமெரிக்கா ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது. நிலையத்தை உடன் திரும்ப ஒப்படைக்கும்படி அது கேட்டிருக்கிறது.

நிலையத்தைப் பாதுகாக்குமுகமாகவே அது எடுக்கப்பட்டதென்றும், விரைவில்திரும்ப ஒப்படைக்கப்படுமென்றும் இந்தோனேஷியா அறிவித்திருக்கிறது.

அமெரிக்க கலாச்சார நிலையத்துக்கெதிரே ஆர்ப்பாட்டம் நடைபெற்றதைத் தொடர்ந்து இந்த நிலைமை உருவாயிற்று.

மே. ஜெர்மனி எச்சரிக்கை

பொன், பெப். 16

கெய்ரோவுக்கு வர கிழக்கு ஜெர்மன் தலைவர் உல்பிரைட் அனுமதிக்கப்பட்டால் ஐக்கிய அராபியக் குடியரசுக்கு அளிக்கப்படும் சகல பொருளாதார உதவிகளையும் நிறுத்திவிடப் போவதாய் மேற்கு ஜெர்மனி கூறியிருக்கிறது.

மேற்கு ஜெர்மனி ஐக்கிய அராபியக் குடியரசின் உள்விவகாரத்தில் தலையிடுவதாக மேற்குஜெர்மன் தலைவர் இது பற்றிக் கண்டனம் தெரிவித்தார்.

வில்சன்

லண்டன், பெப். 16

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் மார்ச் 5-வ திகதி மேற்கு ஜெர்மனிக்கு விஜயம் செய்வார்.

பிரெஞ்சு பிரதமர் புறப்பட்டார்

பம்பாய், பெப். 16

இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த பிரெஞ்சு பிரதமர் திரு. பொம்பிடோ 11 நாள் விஜயத்திக்குப் பின் நேற்று பம்பாயிலிருந்து பாரிஸ் புறப்பட்டார்.

உலகப் பிரச்னைகளை இந்தியாவும் பிரான்சும் ஒரே கோணத்தில் அணுகுகின்றன என்றும், தாம் இந்தியாவில் கண்டவை தம்மை வெகுவாகக் கவர்ந்திருப்பதாயும் புறப்படுமுன் அவர் கூறினார்.

தனது விஜயத்தைத் தொடர்ந்து மேலும் பல அம்சங்களில் இரு நாடுகளுக்குமிடையே நெருக்கமான தொடர்பு ஏற்படும்என அவர் கூறினார்.

சாகித்திய அகாடமி பரிசு

புதுடில்லி, பெப். 16

1964-ம் ஆண்டுக்கான சாகித்திய அகாடமி இலக்கியப் பரிசுகளை ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் நேற்று வழங்கினார். 13 ஆசிரியர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. சாகித்திய அகாடமி ஆரம்பமாகியது முதல் இதுவரை 100 பேர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

பாகிஸ்தான் பொதுத் தேர்தல்

கராச்சி, பெப். 16

பாகிஸ்தான் தேசிய சட்டசபையில் 150 ஸ்தானங்களுக்கான தேர்தல் அடுத்த மாதம் 21-ம் திகதி ஆரம்பமாகும். இன்று நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

மொழிப்பிரச்னையில் தனியாக போராடுவேன்

பம்பாய் கூட்டத்தில் ராஜாஜி உறுதி

பம்பாய், பெப். 16

கிரேக்கவீரன் ஹர்குலிஸ் போல என்னுடைய சொந்த பலத்தைக் கொண்டு தாம் மட்டும் தனித்து நின்று மொழிப் பிரச்னையில் போராடப் போவதாக சுதந்திரக்கட்சித் தலைவர் ஸ்ரீ சி. ராஜகோபாலாச்சாரியார் கூறினார்.

சௌபாத்தி கடற்கரையில் பிரமாண்டமானபொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் "என்னுடைய மனது முழுதும் மொழிப் பிரச்னையிலேயே இருக்கிறது. ஆனால் அதுபற்றி இன்று பேசப் போவதில்லை" என்றார்.

அவர் கூறியதாவது: நான் சுதந்திரக்கட்சி மேடையில் பேசுகிறேன், இந்தப் பிரச்னையை கட்சிமீது சுமத்த விரும்பவில்லை. முன்புள்ள தேசியப் பாதுகாப்பு போன்ற முக்கியமான பிரச்னைகளில் அது கவனம் செலுத்த வேண்டும். மற்ற சிறிய வேலைகளையெல்லாம் நானே சமாளித்து விட முடியாது.

ஆட்சிமொழி சம்பந்தப்பட்டவரை நாட்டில் தற்போதைய அரசியல் நிலைமை ஏற்றதல்லவாதலால் இப்போதுள்ள நிலைமையே நீடிக்கவேண்டும் என்று அகில பாரத ஹிந்து மகாசபைத் தலைவர் ஸ்ரீ நித்ய நாராயணபானர்ஜி கூறினார்.

நாட்டை மிக முக்கியமான பிரச்னையெல்லாம் எதிர்நோக்கிக்கொண்டிருக்கும்போது ஒரு புதிய பிரச்னையைத் தோற்றுவிப்பது விவேகமல்ல என்று ஸ்ரீ பானர்ஜி கூறினார்.

பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் அவர் கூறுவதாவது: நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கக்கூடிய அல்லது நாட்டைச் சிதறுண்டு பண்ணக்கூடிய எதையும் மகாசபை எதிர்க்கிறது தங்கள் மீது ஹிந்தி திணிக்கப்படுகிறது என்று நாட்டின் பெரும்பாலான பிரிவினர் கருதுகின்றனர் என்பதையே மொழிப் பிரச்னை சம்பந்தமாக எழுந்துள்ள தற்போதைய நிலைமை தெளிவாகக்காட்டுகிறது. இந்த எண்ணம் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குப் பதிலாகப் பிளவு உண்டு பண்ணுகிறது.

துரதிருஷ்டவசமாக ஹிந்தி பேசும் ஆளுவோரின் வழிகளும் முறைகளும் அவை ஹிந்தி பேசாத பகுதிகள்மீது ஏற்படுத்தியுள்ள விளைவுமே இந்த ஹிந்திஎதிர்ப்பு உணர்ச்சிக்குக் காரணம். குறிப்பாக ஹிந்தி பேசாத மக்களுடைய மனதில் ஹிந்தி ஏகாதிபத்தியம் ஏற்படுமென்ற அச்சத்துக்கு இதுவே காரணம். ஆங்கிலம் ஒருபோதும் இந்தியாவிலுள்ள சாமானிய மக்களின் பொதுமொழியாக இருக்கமுடியாததாலையால் ஹிந்தி தான் பொது மொழியாவது திண்ணப், ஆனால் அதற்கு அவகாசம் கொடுக்கப்படவேண்டும்.

நமது தேசிய ஒற்றுமையின் அடிப்படையாக இருந்த மதமும் சமஸ்கிருத மொழியும் தற்பொழுது ஆட்சியாளர்களால் படிப்படியாகப் புறக்கணிக்கப்பட்டது, ஒடுக்கப்பட்டது. தேசிய ஒற்றுமைக்காகத் தவறான சமயத்தில் தவறான கொள்கை பின்பற்றப்படுகிறது.

ஆட்சிமொழிப் பிரச்னையில் தற்போதைய நிலைமை நீடிக்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.

இன்னும் சிறிது காலத்திற்கு மத்திய சர்க்காரில் ஆங்கிலம் நீடிக்கவேண்டுமென்றும், இந்தியாவின் எல்லா மொழிகளுக்கும் சம முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டுமென்றும் மேற்கு வங்க பாரதிய ஜனசங்கம் கோருகிறது.

ஆட்சி மொழியில் மாற்றம் செய்வதற்காக உடம்பில் தீ வைத்துக்கொண்டு மரணமடைவது 'பைத்தியகாரச்செயல்' என்று பீஹார் அசெம்பிளி சபாநாயகர் ஸ்ரீ எல். எல் சதான்ஹி நேற்று இங்கு சொன்னார்.

இதில் ஏராவது சந்தேகம் இருந்தால், ஹிந்திக்குப் பதில் ஆங்கிலம் நீடிப்பதுபற்றி ஹிந்தி பேசும் மக்கள் மனத்திலும் அதேசந்தேகம் உள்ளது என்று அவர் மேலும் கூறினார். தேசிய மொழிக்குப் பதில் ஆங்கிலத்தில் ஒரு சுதந்திர நாடு கட்சி அலுவல்களை நடத்துவது என்பது நினைக்கமுடியாததாகும் என்றார்.

அவர் இங்கு ஹிந்தி பரிஷத் ஆண்டுவிழாவில் பேசினார்.

"ஆங்கில நீடிப்பு சம்பந்தப்பட்டவரை ஹிந்தி பேசாத ராஜ்யங்களுக்கு நேரு அளித்த உறுதிமொழியை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் ஆங்கிலம் நீடிப்பு ஹிந்தி பேசும் ராஜயங்கள்மீது சுமத்துவதாக இருந்தால் அதை நான் எதிர்ப்பேன். மேலும் சத்தியாக்ரகத்தையும் மேற்கொள்ளுவேன்" என்றார்.

மேலும் ராஜ்யத்துக்கும் மத்திய சர்க்காருக்கும் இடையே கடிதப் போக்குவரத்தில் ஆங்கில மொழிபெயர்ப்பும் பிரதியை அறுப்புவதையும் எதிர்ப்பேன் என்றார். ராஜ்யத்துக்கும் மத்திய சர்க்காருக்கும் இடையே கடிதப் போக்குவரத்துக்கு ஆட்சிமொழியான ஹிந்தியைத் தவிர வேறு எந்த மொழியும் இருக்கமுடியாது என்றார்.

தென்னக மக்கள் ஹிந்தி விஷயத்தில் சகிப்பின்மையைக் கைவிடவேண்டும் என்று ஆர். எஸ். எஸ் தலைவர் ஸ்ரீ எம். எஸ். கோல்வால்கர் சொன்னார்.

ஆங்கில ஆதரவாளர்களைத் திருப்திப் படுத்துவதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்த முயற்சி ஏதாவது நடந்தால் அதனை பாரதிய ஜனசங்கம் எதிர்க்கும் என்று ஜனசங்க பொதுக்காரியதரிசி ஸ்ரீ. சி. தீனதயாள் உபாத்தியாயா இன்று இங்கு கூறினார்.

ஆங்கிலத்தை தாராளமாக பயன்படுத்தும் இழிநிலை இன்னமும் மாறவில்லை என்று அவர் அறிக்கையொன்றில் குறிப்பிட்டார். ஆங்கிலம் காலவரம்பின்றி நீடிக்க ஆட்சிமொழி சட்டம் வகைசெய்துள்ளது, மத்திய சர்க்கார் அறிவித்துள்ள மொழிக்கொள்கை ஹிந்திபேசும் மக்கள் கூட ஹிந்தியைப் பயன்படுத்துவதை கட்டுப்படுத்துகிறது. சர்க்கார் மொழிக்கொள்கை சம்பந்தமாக ஹிந்தி பேசாத மக்களின் அச்சமும், சந்தேகமும் ஆதாரமற்றவை என்று ஸ்ரீ உபாத்தியாயா மேலும் கூறினார்.

பாகிஸ்தானில் சுபந்திரியோ

ராவல்பிண்டி, பெப். 16

இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோ இன்று பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருக்கிறார். மலேஷிய தகராறில் ஒரு சமுக முடிவு காண்பதுபற்றி அவர் அயூபகானுடன் பேசவார் என அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தென்னை, பனைகளை அதிகமாக உற்பத்திசெய்யவேண்டும்"

பருத்தித்துறை, செவ், மழைநீரைக் கடலுள் செல்ல விடாது தடுத்துச் சேமிப்பதுடன் நின்றுவிடாது யாழ்ப்பாணப்பகுதியில் கூடுதலான மழையைப் பெய்விக்குமுகமாக பனை, தென்னை முதலான உயர்ந்துவளரும் மரங்களை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். அப்படியானால் குடாநாட்டின் நீர்ப்பிரச்னை தீர்க்கப்படக் கூடிய ஒன்றாகும்.

இவ்வாறு நீர்ப்பாசன இலாகா உதவி அதிபர் திரு. எஸ். ஆறுமுகம் குடாநாட்டின் நீர்ப்பிரச்னை சம்பந்தமாக பருத்தித்துறை ரோட்டரிக் கிளப்பில் உரையாற்றுகையில் கூறினார்.

ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் இன்றைய நீர்ப்பிரச்னைக்கு நீரை அதிகமாகவும் வேகமாகவும் வெளியேற்றுவதுடன் மழைக் குறைவுமே காரணமாகும். இஸ்ரேல் போன்ற வரண்ட நாடுகளில் தண்ணீரைக் கட்டுப்பாட்டின் கீழ்ப் பயன்படுத்திவர நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

இதைவிட கிணறுகளில் தண்ணீர் குறைந்து செல்லும் அளவுகள்பற்றிய திட்டமிட்ட பரிசீலனை செய்யப்பட வேண்டியதும் அவசியமாகும் என்றார்.

கூட்டத்தின் ஓர் அம்சமாக நடைபெற்ற கருத்தரங்கிலும் பலர் கலந்து கொண்டனர்.

காரியாதிகாரி திரு. யே. டி. ஆர்னல்ட் நன்றி தெரிவித்தார்.

மன்னாரில் காற்றும் மழையும்: குளங்கள் நிரம்பின

மன்னார், செவ். மன்னார்ப்பகுதியில் எதிர்பாராதவிதமாக இரு தினங்கள் காற்றுடன் மழைபெய்தது. நான் முழுவதும் பெய்த மழையினால் கடல்நீராகக் கிடந்த குளங்களெல்லாம் நிரம்பி வெள்ளமாக காட்சி அளிக்கின்றன.

மன்னார்த்துறைமுகத்திலும் பாலத்தின் அருகேயும், நடந்த வேலைகள் இந்த மழையினால் சில மணிநேரமாக ஸ்தம்பித்தன. மழையுடன் காற்றும் நின்றபடியால் கடல்தொழிலாளர் கடலுக்கு செல்லவில்லை. இதனிமித்தம், மீனுக்கு கூடியவிலைகளும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. தற்காலிக கொட்டில்கள் அமைத்து வீடு கட்டும் வேலைகளை செய்தவர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். நகரமெங்கும் தேங்கிநிற்கும் தண்ணீரை அகற்றுவதில் பொதுமக்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த மழையினால் கட்டுக்கரை குளத்தில் 4 அடி தண்ணீர் உயர்ந்துள்ளது.

வீர ஏகாதசி விழா

பனை, செவ்வாய் சென்ற வெள்ளியன்று இரவு பச்சிலைப்பள்ளிப்பகுதியில் மல்லில் குறிச்சியில் எழுந்தருளியிருக்கும் மல்லில் கிருஷ்ணன் கோவிலில் இவ்வருடம் மாசி மாத வீர ஏகாதசி விழா அதிவிமரிசையாக நடைபெற்றது. கும்பாபிஷேகம் நடந்து முன்றாவது விழாவாக நடைபெற்ற இவ் விழாவில் பக்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.

ஜெர்மன் படக்காட்சி

குரும்பசிட்டி, செவ்வாய் குரும்பசிட்டி உதயதாரகை சனசமூக நிலைய ஆதரவில் இலங்கையிலுள்ள ஜெர்மன் ஜனநாயக குடியரசு ஸ்தானிகராலய தகவல் பகுதியினரால் (இன்று) புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய இரு தினங்களிலும் குரும்பசிட்டி கிராமமுன்னேற்ற சங்க மண்டபத்தில் மாலை 6-30-க்கு திரைப்படக்காட்சி காண்பிக்கப்படும்.

பிரதமருக்கு திருப்பி அனுப்பினர்

சுழிபுரம், செவ்வாய் அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றத்துக்கு கல்வி இலாகாவில் சிங்களப் பாஷையில் மட்டும் அனுப்பப்பட்ட பதில்கள் ஒன்றும் புரியாததால் புரியக்கூடிய பாஷையில் எழுதி அனுப்பும்படியும், சிங்களத்தில் மட்டும் பதில் அனுப்புவதாக இருந்தால் மொழிபெயர்ப்பாளர் ஒருவரையும் உடன் அனுப்பிவைக்கும்படியும் வேண்டி பத்துக்கு மேற்பட்ட சிங்களக் கடிதங்களை நேற்று அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றச் செயலாளர் திரு. புவனேந்திரன் பிரதம மந்திரிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

புதிய உத்தியோகத்தர்

சுழிபுரம், செவ்வாய் இலங்கைத் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியின் காரைநகர்க் கிளை அமைப்புக் கூட்டம் காரைநகர் வடக்கு நீலிப்பந்தனை அம்மன் கோயிலடியிலுள்ள சனசமூகநிலைய மண்டபத்தில் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான வாலிபர்கள் பங்குபற்றினர். திரு. எஸ். ஆலாலசுந்தரம் வாலிப முன்னணியின் கட்டமை, சமஷ்டி அரசியல், எமது பொருளாதாரம் ஆகிய விஷயங்களை எடுத்துவிளக்கினார். மற்றும் பலரும் பேசினார்கள்.

நடப்புவருட உத்தியோகத்தர்கள் வருமாறு: தலைவர்: க. சபாரத்தினம், உபதலைவர்: ந. பாக்கியராசா, செயலாளர்: க. அமிர்தசிங்கம், உபசெயலாளர்: க. கனகசபை, தனாதிகாரி: ஆ. இராசரத்தினம், நிர்வாகசபை உறுப்பினர்கள்: க. கந்தசுவாமி, தி. செந்தில்நாதன், க. இராசரத்தினம், பொ. சோமசுந்தரம், அ. மனோகரன், செ. ஞானப்பிரகாசம், வே. பாலன், ந. பாலகிருஷ்ணன், செ. தில்லையம்பலவாணர், க. நல்லையா, ஆ. சங்கரப்பிள்ளை.

நிர்வாகிகளின் முடிவை மந்திரி நிராகரித்தார்

பம்பலப்பிட்டி, செவ்வாய் தவறான முறையில் நியமனம் பெற்றார்களென்று கருதப்படும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தைச் சேர்ந்த 500 ஊழியர்களை நிறுத்துவதென கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் நிர்வாகிகள் செய்த முடிவை வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன நிராகரிப்பதென முடிவுசெய்ததாகக் கூறப்படுகிறது. நிர்வாகிகளின் முடிவை மந்திரி நிராகரிப்பதாகவிருந்தால் சில நிர்வாகிகள் ராஜினாமாசெய்யக்கூடுமெனவும் சொல்லப்படுகின்றது.

இலவச படக்காட்சி

கழிபுரம், செவ்வாய் அமெரிக்க தகவல் பகுதியினரால் தொல்புரம் மத்திய சனசமூகநிலைய விளையாட்டு மைதானத்தில் இலவச படக்காட்சி நேற்றிரவுகாண்பிக்கப்பட்டது. இக்காட்சியைப் பல நூற்றுக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர்.

பழுதடையும் கருவாடு

பம்பலப்பிட்டி, செவ் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் 10,000 தொன் நிறையுள்ள 200லட்சம் ரூபா பெறுமதியான கருவாடு பழுதடைந்ததன் காரணமாக அதனை மக்கள் சாப்பிட்டுமுடியாதென்று அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். பழுதடைந்த கருவாடு உரம் செய்பவர்களுக்கே சட்டப்படி விற்பனை செய்யப்படவேண்டும். ஆனால் இப்படியாக விற்பனைசெய்வதற்குக் கூ. மொ. வி. ஸ்தாபனம் எடுத்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. சென்ற வாரம் 1,100 தொன் கருவாட்டைத் தான் கூ. வி. மொ. ஸ்தாபனம் விற்பனை செய்யமுடிந்தது. பழுதடைந்த கருவாடுகளை வைப்பதற்கு இடம் தேடுவதும் ஒரு பிரச்னையாகிவிட்டது.

தமிழரசுக் கூட்டம்

மன்னார், செவ்வாய் மன்னார் தொகுதியில் தமிழரசு வேட்பாளராக நிற்கும் திரு. வி. ஏ. அழகக்கோனை ஆதரித்து குமரன் படமாளியில் பள்ளிமுனை வட்டார அங்கத்தவரும் தமிழரசுக்கட்சி மன்னார்க் கிளையின் தலைவருமான திரு. அரசரட்ணம் ஜோசப் தலைமையில் பிரசாரக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், வட்டுக்கோட்டை முன்னாள் எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம், வர்காவற்றுறை முன்னாள் எம். பி. திரு. வி. நவத்திரனம், மன்னார் இளைஞர் மன்றத் தலைவர் திரு. எஸ். பெனடிக்ற் முதலியோர் பேசினர்.

நியர்ரே சீனா செல்கிறார்

தார்-எஸ்-ஸலாம், பெப் 16 தங்கனீகா அதிபர் திரு. ஜூலியஸ்நியர்ரே பெரிய தூதுகோஷ்டி ஒன்றுடன் பீகிங் புறப்பட்டிருக்கிறார்.

பதவிக்கு வந்தால் கூட்டரசு அமைப்போம்

சுதந்திரக்கட்சியின் கொள்கைவிளக்கம்

கொழும்பு, செவ் "சிங்களத்தை உத்தியோக மொழியாக பூரணமாக அமுல் செய்வதுடன் தமிழ்மொழி (விசேட சரத்து) மசோதாவையும் தமிழர்களும் சிங்களவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமுல் செய்து அதன்மூலம் இரு சமூகங்களுக்கிடையேயும் ஒற்றுமையையும் அமைதியையும் நிலைநாட்டுவது."

"சுதந்திரத்தின் நலன் கருதியும், மக்களின் வாழ்க்கையை வளம்படுத்தவும் கூட்டரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டு நாட்டின் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியதாக அரசியல் சாஸனம் திருத்தம் செய்யப்படும்."

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்கொள்கைப்பிரகடனத்தில் முன்னர் குறிப்பிட்ட இரு அம்சங்களும் அடங்கியுள்ளன. கட்சியின் கொள்கைப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்ட வேறு பல முக்கிய அம்சங்கள் வருமாறு—

மற்ற மதங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் மதத்தைக் கைக்கொள்வதற்கு சுதந்திரமிருக்கும் அதேநேரத்தில் பௌத்த மதத்துக்கு உரிய இடம் அளிக்கப்படும். * சகல போயா நாட்களையும் விடுமுறைநாட்களாக்குவகையில் விடுமுறை நாட்கள்பட்டியலைமாற்றம்செய்தல். * அனுராதபுரத்தில் பௌத்த பல்கலைக் கழகம் ஒன்று நிறுவுதல். * கசிப்பு தொல்லையை நீக்க மாற்று நடவடிக்கை இயக்கம் நடத்துவது. புத்தரின் போதனைக்கிணங்க மதுபானம் அருந்தாமல் இருக்க மக்களுக்கு கல்வி புகட்டல். ∴ அத்தியாவசிய பொருள்களின் விலையைக் குறைத்தல். பரந்த அதிகாரம் உள்ள கண்காணிப்பு கமிட்டிகள் மாவட்டம் தோறும் நியமிக்கப்பட்டு, கள்ளச்சந்தை, பதுக்கல், லஞ்சம், ஊழல் முதலியவற்றைக் கண்டுபிடித்தல். ∴ உள்நாட்டு, வெளிநாட்டு வங்கிகளையும், ஏஜன்ஸி ஸ்தாபனங்களையும் நாட்டு நலனுக்கு உபயோகிக் நடவடிக்கை எடுத்தல். ∴ அரசாங்க கார்ப்பரேஷன்களிலும், கைத்தொழில் ஸ்தாபனங்களிலும் தொழிலாளர் கவுன்ஸில் அமைத்தல். ∴ அரசாங்க இலாகாக்களிலும், கார்ப்பரேஷன்களிலும், உள்ளூராட்சி இலாகாக்களிலும் கண்காணிப்பு கமிட்டிகளை நிறுவி அரசாங்கத்துக்கு விரோதமாக நடந்துகொள்பவர்களைக் கண்டுபிடித்தல். பொது மக்களிடமிருந்துவரும் புகார்களைக் கொண்டு நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இக் கமிட்டிகளுக்கு இருக்கும். * தேசிய கல்வித் திட்டத்தை அமுல் நடத்துவது. பிரிவினை கல்வி பற்றி ஆலோசனை கூற ஆலோசனைச்சபை ஒன்றை நிறுவுவது. * வருடந்தோறும் எத்தனை கட்டடங்கள் கட்டப்படவேண்டும் என ஒரு குறியளவு வைத்து வீடில்லாக் கஷ்டத்தைப் போக்குவது. * சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தை உடனடியாக அமுல் நடத்த மேலும் நடவடிக்கை எடுத்தல். ஒப்பந்தத்தின் பிரகாரம் நாட்டை விட்டு வெளியேறும் இந்தியர்களுக்காக இலங்கையரை பயிற்றுவித்தல். * உண்மையான தேசிய பத்திரிகைகளை உருவாக்கும் வகையில் பத்திரிகைக் கமிஷனின் சிபார்சுகளை அமுல் நடத்துவது.

* தற்பொழுது நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நிவர்த்தி செய்யுமுகமாக, நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தல், கைத்தொழில் பிறஸ்தாபனங்களை இலங்கையர் மயமாக்குதல், புதிய கைத்தொழில்கள் ஆரம்பித்தல், இப்பொழுதுள்ளவற்றை விஸ்தரித்தல். அரசாங்க உத்தியோகஸ்தர் அனுபவிக்கும் சலுகைகளை விவசாயிகளுக்கும் அளித்தல். * லஞ்சம், ஊழல் சம்பந்தப்பட்ட விசாரணைகளில் ஏற்பட்டுவரும் தாமதத்தை நிவர்த்திக்க விசேஷ நீதிமன்றங்களை நிறுவி, குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களைத் தண்டிக்க புதிய சட்டங்கள் இயற்றுதல்,

சுருக்கிட்டு தற்கொலை

உடுப்பிட்டி, செவ்வாய் உடுப்பிட்டியைச் சேர்ந்த சடையன் பாலசிங்கம் என்பவர் (25 வயது) வல்லை வெளியில் பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கருகாமையில் ஓர் ஆலமரத்தில் கழுத்தில் தானே வயர் கம்பியினால் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்து கொண்டார்.

"குடும்பத்தகராறு காரணமாகத் தற்கொலை செய்கிறேன்..." எனக் கடிதமும் எழுதி வைத்திருந்தார். இது பற்றி விசாரணை செய்த திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வி. பி. ராஜரத்தினத்திடம் இறந்தவரின் மனைவி தங்கம் சாட்சியமளிக்கையில், "தாங்கள் மிகவும் அன்னியோன்னியமாகவே வாழ்ந்து வந்ததாகவும் இல்லற வாழ்க்கையில் எதுவித சச்சரவுகளுக்கும் தான் இடம் வைக்கவில்லையென்றும் குறிப்பிட்டார்.

இறுதியில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது;

காச நோய் தடுப்பு நிலையம்

பருத்தித்துறை, செவ் வடமராட்சியில் காசநோய்த் தடுப்புச்சிகிச்சை நிலையமொன்றைஸ்தாபிக்கும்படி சுகாதாரத்துறை அதிபர், அமைச்சர் ஆகியோரைக் கோருவதென தேசிய காச நோய்த்தடுப்புச் சங்க வடமராட்சிக் கிளைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தலைவர் திரு. வி. கே. சின்னையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி நிலையத்தை ஸ்தாபிக்க அரசாங்கம் முன்வரும் பட்சத்தில் கட்டிடம், டாக்டர் ஆகியவை தவிர்ந்த தளபாடங்கள் முதலானவற்றை சங்கம் உதவும் முடிவு செய்யப்பட்டது.

புகையிலை—வெங்காயம்—மிளகாய்—கத்தரி—தக்காளி—முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
அழுக்கணவனையும்—புழுக்களையும் அழிப்பதற்கு
BAYER
மெற்றசிஸ்ரொக்ஸ் உடன் - டிப்ரெறெக்ஸ்
METASYSTOX DIPTEREX
கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத்தொடங்கவும்
PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T' GRAMS ROYAEL

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"வசதியான முறையில் உணவு உற்பத்தியைபெருக்குக"

மாவட்ட செயற்குழு தலைவர் யோசனை

உடுப்பிட்டி, செவ்.

'பாதகமான வானிலைச்சாதனங்கள் இலங்கையில் மட்டுமின்றிப் பல்வேறு நாடுகளிலும் விளைபொருளாக்கத்தைச் சுருக்கியுள்ளன. உணவுப்பொருள் உற்பத்தியை அதற்கான வசதிகள் உள்ள இடங்களில் உடனே பெருக்கிக்கொள்ளுதல் அவசியமாகின்றது. எமது தலையாய உணவைத்தரும் அரிசி இன்று எமக்குப்போதாத நிலையிலுள்ளது. அதற்குப் பதிலான சுரக்கன், சாமி, தினை ஆகிய தானியங்களையும் மரவள்ளி, இராசவள்ளி போன்ற கிழங்கு வகையையும் கூடுதலாக உண்டுபண்ணற்கு வாய்த்த முறையிற் பயிரிடுதலை அமைத்துக் கொள்ளுதற்கும் யாழ்ப்பாணக்குடா நாட்டிலேயுள்ள சாதகமான வசதிகளை உற்பத்தியாளர்களினதும் பொதுமக்களினதும் நன்மையின் பொருட்டு அனுகூலமாகப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்புகள் உண்டு"

இவ்வாறு மாவட்ட விவசாயச் செயற்குழுத் தலைவர் திரு. என். டி. ஜயவீர வடபகுதி விவசாயிகளுக்கென வெளியிட்டுள்ள விசேஷ அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இன்று நிலவும் பாதகமான நிலைமைகளைச் சமாளிப்பதற்குச் சகல விவசாயிகளினதும் உதவி தேவைப்படுகிறது எனவும் அவர் கூறினார்.

REGAL — JAFFNA
NOW SHOWING
Chuck Connors–KamalaDevi
in
GERONIMO
(Panavision – Technicolor)

ராஜா சினிமா (சுழிபுரம்)
சிவாஜி - தேவிகா
நடிக்கும்
அன்னை இல்லம்

விளையாட்டுக் கழக பொதுக்கூட்டம்

வவனியா, செவ்.

"மனிதவாழ்வின் முக்கிய நோக்கம் இறைவனை வழிபடுதல். எல்லா உயிர்களது இதயத்திலும் இறைவன் இருக்கிறான் என்பதைக் கூறுவதற்கு சைவசமயத்தையும் தமிழையும் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் பல கஷ்டங்களுக்கிடையே வளர்த்தபெருமை நாவலர் பெருமானையேசாரும். அவர்நாமங்களைக் கூறிபலநிலையங்கள் இன்னம் இயங்கிவருகின்றன. எமது கிளையே அதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது" எனசரவணை நாவலர் விளையாட்டுக்கழக வவனியாக் கிளையின் இரண்டாவது ஆண்டுக்கூட்டத்துக்கு தலைமைவகித்துப் பேசிய திரு. பெ. நடராசா குறிப்பிட்டார்.

இவ்வாண்டின் உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்- பெ. நடராசா, உபதலைவர்- க. பொன்னுத்துரை காரியதரிசி- க. சொக்கலிங்கம், தனாதிகாரி- ம. கந்தசாமி, இவர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

பொலிசார் சுகமடைந்தனர்

காங்கேசன்துறை, செவ்.

நஞ்சு கலந்த உணவு அருந்தியது காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் பொலிஸநிலையத்தைச் சேர்ந்த 67 பொலிசார் சுகமடைந்து கட்டமைக்குத் திரும்பினர்.

6-வது வெற்றி வாரம்!
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்: மாலை 2-30, இரவு 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்:
காலை 10-30, மாலை 2-30, இரவு 6-30, 9-30

சிவாஜி கணேசன் - சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
கர்ணன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
மற்றும் 6 சினிமாஸ் திரைகளில்
ஜெமினி கணேசன் - சாவித்திரி
நடித்த
கற்பகம்

சமய, சமூக அல்லல்களை நீக்க மகாயாகம்

கொழும்பு, புதன்

இன்றுமுதல் வருகிற 22-ம் திகதிவரை கொழும்பு தட்டாதெரு ஸ்ரீ சிவகப்பிரமண்ய சுவாமி ஆலயத்தில் இலட்சார்ச்சனையும் மகாயாகமும் நடைபெறுகிறது.

நாட்டில் நிலவும் சமூக, சமய அல்லல்களுக்கு தீர்வுகாண இந்த 6 நாட்களும் திடபக்தி வைராக்கியத்துடன் கூட்டுவழிபாடு, பூஜை, அபிஷேக ஆராதனைகளை எங்கும் ஏககாலத்தில் நடாத்த வேண்டும். ஏககாலத்தில் வழிபாடு செய்வதில் அளப்பரும் பலனுண்டு; இதனால் திருவருட் சிந்தனைச்சக்திகள் பரவி நாசசக்திகளை நலியச்செய்து, ஆக்கசக்திகளை வலியடையச் செய்யும். ஏககாலத்தில் பல மக்கள் கூடிப் பிரார்த்திப்பதால் ஏற்படும் புனித சக்தியினால் மக்கள் வாழ்வு உள்ளும் புறமும் புனிதமடைந்து திருவருள் செறிய வாய்ப்பாகின்றது; இதனை மகாத்மாகாந்தியும் விநோபாஜியும் அன்றைமையில் நிரூபித்திருக்கின்றனர்

மகாயாகம் இலட்சார்ச்சனை நடக்கும் ஆறு நாட்களிலும் அன்பர்கள், அடியார்கள் தத்தம் இடங்களில் கோவில் கொண்டருள்பாலிக்கும் மூர்த்திகளுக்கு இயன்றளவு பொதுவழிபாடு,பூஜை, ஆராதனைகள் செய்யும்படி வேண்டப்படுகின்றனர், இவ்வாறு நாட்களையும் அனுசரித்து ஆலய வழிபாடுகள் முடியாவிடின் ஆறுவது நாளான விசாகத்தன்று (22-2-65-ல்) விசேஷ பூஜை அபிஷேகாராதனைகள் செய்து எமது நோக்கம் நிறைவுற வேண்டும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். யாதொரு தட-ஜப-வழிபாடும் தானமின்றி நிறைவுறுததால் இயன்றளவு அன்னதானம் வழங்கினால் நலம்.

ஆலய வழிபாட்டில் பங்கு பற்ற முடியாதவர்கள் தத்தம் வீட்டிலிருந்து பொது நலத்துக்கு வழிபாடு செய்வது நலம்.

தியாக உணர்வுடன், அன்பர்கள் அடியார்கள் உபவாச விரதபூர்வமாக வழிபாட்டாற்றினால் திருவருட்கருணை எளிதிற் சித்தியாகும். மேலும் எம்மையும் எம்வருங்கால சந்ததியையும் எதிர்நோக்கும் இருட்சக்திகளைப் போக்கி அமைதியாய் வாழ்வதற்கு எத்தனைத் தியாகமும் ஒரு பொருட்டாகக் கருதுவதற்கில்லை. தவவிரத பலனாற்தான் வேதகால முனிவர்கள் தொடக்கம் மகாத்மாகாந்தி அடிகள்வரை செயற்கரிய காரியங்களை உலக நலனுக்காக ஆற்ற முடிந்தது என்பதை யாம் மறந்துவிடக்கூடாது.

கொழும்பில் நடைபெறும் மகாயாகத்திலும் இலட்சார்ச்சனையிலும் சமய-சமூகத் தொண்டர்கள் கலந்து கொள்ளுவதால் தத்தம் பணிக்கு வேண்டிய திருவருட்பலத்தை எளிதிற் பெறலாகும். அன்பர்கள் தங்கவும் மற்றும் உணவு வசதிகளும் அளிக்கப்படும். பல அன்பர்கள் அடியார்கள் வந்து விரத வழிபாட்டுடன் எங்கள் எல்லாருடைய நலனுக்கும் 6 நாளும் முருகப்பிரானை வேண்டுதல் செய்வதற்கு வரவேண்டும்.

விசேஷமாக எமது நாட்டிலுள்ள தியாகசீலர்களுக்கும் அடியார்களுக்கும் சமய-சமூகத் தொண்டர்களுக்குமாகவும் வேண்டுதல் செய்ய வேண்டும் அன்னாருடைய புனித உள்ளத்திலூறும் கருணையாற்தான் நற்காரியங்களும் சற்காரியங்களும் நடைபெற்று தர்மதீபம் அணையாமல், பலப்பல அசுத்தப் புயல் வீசியும் காப்பாற்றப்படுகின்றது. ஆகையால் தொண்டர்கள் அனைவரின் க்ஷேமத்திற்குக் கட்டாயமாகப் பிரார்த்திக்க வேண்டும்.

இச்சீரிய சிந்தனைகளை மனதிற் பதித்து, அன்பர்கள் அடியார்கள் தங்களுடைய நித்திய பூஜை பிரார்த்தனைகளிலும் இறைவனை உள்ளுற வேண்டும்படி கிளை ஆட்டி விரும்புகின்றனர், பரோபகார சிந்தயுடைமை எந்தமிழரிடையே நிகமிக அருகிவிட்டது. கவலைக்கிடமான இந்நிலை ஒழிய வேண்டும். மன்னுயிர்க் கருணையில்லாவிடின் எம்வாழ்வும் வரண்டு, வீடும்வரண்டு நாடும் வரண்டுவிடும். தருமம் தழைக்க வேண்டும். இடர்பண்பில் நிற்கும் அத்தியாவசியச் சிறப்பை அன்பர்கள் பிறருக்கு எடுத்து விளக்கி அவர்களையும் அவ்வழி நிற்கவைக்க வேண்டும்.

ஏககாலத்தில் எல்லாக் கோவில்கள் அருள்நிலையங்கள் முதலியவற்றில் பொதுநலனுக்காக விரதவழிபாட்டாற்றும் இயக்கத்தைப் பரப்புவதற்கு உழைக்கும் பணியாலேதான் இன்று மனித இனத்தின் அல்லல்களுக்கு ஒருங்கே நிவாரணம் காணக்கூடும். இவ்வுண்மையை உணர்ந்து அறநிலையங்களும் அருள்நிலையங்களும் பணியாற்ற வேண்டும்.

வானொலி நிகழ்ச்சிகள்

கொழும்பு

புதன் 17-2-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்,

பகல் 12-00 திரை காளம், 1-00 கதம்ப இசை,

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை,

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 பாட்டு—லீலா துரைசிங்கம், 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9 30 நேயர் விருப்பம், 10-00 தேர்ந்த இசை.

வேலைவேண்டுவோர் கூட்டம்

உடுப்பிட்டி, செவ்.

அகில இலங்கை வேலை வேண்டுவோர் கழகத்தின் உரிமை தினவிழா வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு. ஜி. எம் ஆழ்வாப்பிள்ளை தலைமையில் கொண்டாடப்பட்டது. வடபகுதி உதவி தொழில் ஆணையாளர் திரு. பொ. நவரத்தினம், வித்துவான் திரு. க. நவலன், திரு. கே. ரி. இராஜலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அசமந்தமாக இருக்க வேண்டும்? பிரயாணிகளுக்கு கப்பல் வழியை எப்போது திறக்கப் போகிறார்கள்?

* * *

ஐயனகான் குமரன் கான் ஆதியான் கான் அடல் மழுவாள் தானொன்று பியன்மேலேந்து, கையன்கான் கடற்பூதப் படையினான்கான் கன்னெரியால் ஐங்கனை யோன் உடல் காய்ந்தான் கான், வெய்யன்கான் தன்புனலும் செஞ்சடையான் கான் வெண்ணீற்றான்கான் விசயற்கருள் செய்தான்கான், செய்யன் கான் வெளியேறான் தான் கான் திருவாரூரான் கான் என் சிந்தையானே.

— அப்பர்சுவாமிகள்

மனோகரா (யாழ்ப்பாணம் (போன்: 485
எம். ஜி. ராமச்சந்திரன்
சரோஜாதேவி (நடித்த)
மாடப்புரு
திங்கள், செவ்வாய் 9-50,
சனி, ஞாயிறு
2-30, 6-30, 9-30.

அடைவு நகை ஏல விற்பனவு

தொல்புரம் இ. துரையப்பா அன் சன்ஸ் அவர்களின் அடைவு கடையில் 5-11-62 முதல் 2-11-63 வரையில் அடைவுவைத்து மீட்கப்படாத நகைகளை 16-3-1965 திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 8 மணி முதல் மேற்படி கடையில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
வெந்தீஸ் மேனேஜர்.

சித்தங்கேணி,
12-2-1965. 1619

ஏல விற்பனை

பாவிக்கப்பட்ட லொறி ரயர் 3, ஒஸ்ரின் லொறி ரேடியேற்றர் 1, செவனற் லொறி வில் லுத்தகடு ஒரு செற்; இன்னும் பாவிக்கப்பட்ட லொறி பழைய சமான்கள் 21-2-65 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

தலைவர்,
வாழைக்குலைச் சங்கம் நீர்வேலி
1617

வரி விளம்பரம்

தேவை

பனைவடலி மட்டைத்தும்பு, கத்தம் செய்யப்படுகிறது. வெள்ளை, கறுப்பு. அந்தர் விலைகுறித்து விண்ணப்பிக்கவும். A 2 / F 4, புளுமன்டல் மாடி, கொழும்பு. 1583

வைத்தியம்

சிறுநீர் மஞ்சளாகவோ சிவந்தோ நிறம் மாறிப் போனால் செங்கமாரி நாட்செல்லக் கண்களும் நகங்களும் மஞ்சளாகும். கல்லீரலைப் பாதிக்கும் இந்நோயை முறிவுற்று முதிர்ந்த நிலையிலும் குணப்படுத்துவார். வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரெத்தினம் வேலணை, மற்றும் நீடித்த சகல வியாதிகளையும் குணப்படுத்திக்கைதேர்ந்தவர். தாங்கமுடியாத தலைவலி, ஒரு தலைக் கபாலம், பெண்களின் மாதவிடாய்கால வயிற்றுவலி ஒருவேளை மருந்தால் அற்புதமாகக் குணப்படுத்தப்படும்.

1525

Available

Bull Dozer available on hire at Akkarayankulam C Vivekanandan, Valvettithurai. 1590

இளம் பிள்ளை வாத தடுப்பு மருந்து விநியோகம்

சுழிபுரம், செவ்வாய்

வலிகாமம் மேற்குப் பகுதியில் இளம்பிள்ளை வாத நோய் தடுப்பு மருந்து விநியோகம் வெகு துரிதமாக நடைபெற்று வருகிறது. சங்கானை அரசினர் வைத்தியசாலை டாக்டர். எல். சிவகுருநாதன் ஒவ்வோர் கிராமசபை எல்லையிலும் சேவையாற்றும் மருத்துவ தாதிகள் மூலம் மருந்துகளை விநியோகம் செய்து வருகிறார். இலவசமாக விநியோகம் செய்யும் கிராமசபைக்கு வரும் இளம் குழந்தைகளை நன்கு பரிசோதனை செய்து மருந்து விநியோகம் நடைபெற்று வருகின்றது.

கோமகனுக்கு விருந்து

கராச்சி, பெப்; 16

இங்கு விஜயம் செய்திருக்கும் எடின்பரோ கோமகனுக்கு பாகிஸ்தான் வெளி நாட்டு மந்திரி திரு. பூட்டோ நேற்றிரவு ஒரு விருந்தளித்தார்.

தபாலில்வக்கனிப்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம், உடுப்பிட்டி, நல்லூர் தொகுதிகளுக்கான வாக்களிப்பு இன்று ஆரம்பமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெலிக்கடை சிறையைவிட யாழ். பொலிஸ் விடுதிமோசம்"

கான்ஸ்டபிள் மரணம் பற்றி விசாரணை அதிகாரி கண்டனம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் பொலிஸ் விடுதியிலும் பார்க்க வெலிக்கடை சிறைச்சாலை, ககாதாரத்திலும் மற்றும் வசதிகளிலும் பன்மடங்கு சிறந்ததாகக் காணப்படுகிறது. நான் நாட்டிலுள்ள மற்றும் பொலிஸ் விடுதிகளையும் பார்வையிட்டுள்ளேன், ஆனால் இவற்றைப் போல மிகவும் படுமோசமானதைக் காணவில்லை.

யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் விடுதியில் மின்சாரத்தால் தாக்குண்டு மரணமான பொலிஸ் கான்ஸ்டபிளின் மரண விசாரணையின்போது, யாழ்ப்பாண நகரப்பகுதி மரண விசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய 24 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் சோமசேனு தமது அறையை சுத்தம்செய்யும் போது சென்றவாரம் மின்சாரத்தினால் தாக்குண்டு மரணமானார். சம்பவம் நிகழ்ந்த மறுநாள் தமது மனைவியையும், ஒரே ஒரு குழந்தையையும் யாழ்ப்பாணம் கூட்டி வருவதற்காக லீவு எடுத்திருந்தார் என்று இச் சம்பவம்பற்றி கூறப்படுகிறது.

மரணவிசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, காலஞ்சென்றவரின் மனைவியிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்ததாகவும், அக் கடிதத்தில் தாங்கள் யாழ்ப்பாணம் வரதயாராக இருப்பதாகவும், தங்களை வந்து கூட்டிச்செல்லுமாறு எழுதப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மரண விசாரணை அதிகாரி தமது தீர்ப்பில் மேலும் கூறியதாவது:

இச் சம்பவம் நடந்த பொலிஸ் கான்ஸ்டபிளின் அறை ஒரு நீண்ட அறையாக, 30 அடி நீளமும், 10 அடி அகலமும் இருந்தது. இந்த அறைக்கு ஒரு யன்னல்கூடக் கிடையாது. அறையின் இரு பக்கங்களிலும் இரு கதவுகள் மாத்திரமே இருந்தன. இந்த இரு கதவுகளும் மூடப்பட்டால், அறைக்குள் காற்று புகமுடியாது. கதவுகள் பூட்டியிருக்க வேண்டிய நிலைமையிலிருக்கிறது. இப்படியான சீர்கெட்ட நிலைமையில் இன்னும் 15 குடும்பங்கள் வாழவேண்டியிருக்கிறது. நீண்ட பெரிய அறை ஒரு சுவரினால் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சீர்கெட்ட அறையில்தான் பொலிஸ உத்தியோகத்தர் தமது குடும்பத்துடனும் வீட்டுத் தளபாடங்களுடனும் வாழவேண்டியிருக்கிறது. இது மாநகரசபை சட்டங்களுக்கு முரண்பாடாகவும் காணப்படுகிறது.

நாட்டின் வேறு எந்த மாநகரசபை நிர்வாகத்தில் கீழ் இப்படியான கட்டங்கள் கட்டப்பட்டிருந்தால், கட்டடத்தின் சொந்தக்காரர்மீது வழக்குத் தொடரப்பட்டு, மீண்டும் புதிதாக கட்டப்படவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

யாழ்ப்பாண பொலிஸ நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ கான்ஸ்டபிள்களுக்கு சிறந்த வீடுகள் வழங்கும் பொருட்டு மரண விசாரணையின் 'கொரப்பி' ஒன்று பொலிஸ இன்ஸபெக்டர் ஜெனரலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் மரண விசாரணை அதிகாரி கூறினார்.

விபத்தினால் ஏற்பட்ட மரணமென மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

"பிறருக்கு பாரமாய் இருக்கவிரும்பவில்லை"

தற்கொலை செய்த இளைஞன் கடிதம்

யாழ்ப்பாணம், புதன்

"என்னையே காப்பாற்ற முடியவில்லை. இந்த நிலையில் என் பெற்றோர்களையும், சகோதரர்களையும் எவ்வாறு காப்பாற்ற முடியும்" பிறருக்குப் பாரமாய் இருக்காமல் இந்த உலகில் இருந்து விடைபெற்றுக்கொள்ளுகிறேன்" என நச்சுத் திரவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டசேனு திராசா தெய்வேந்திரன் என்ற 26 வயது இளைஞர் கடிதம் எழுதியிருக்கிறார்.

கொக்குவில், குளப்பிட்டி சந்தியைச் சேர்ந்த இவரது மரணம் பற்றி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார்.

காலஞ் சென்றவரின் தந்தையான வல்லிபுரம் சேனுதிராசா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"எனது மகன் கடந்த 2வருடங்களாகத் தொழிலின்றி அலைந்தார். இதனால் மனக்கவலை அடைந்திருந்தார். எனது தமையனுக்குக் கீழ் ஒன்றரை வருடம் வேலைசெய்தார்.

சம்பவம் நடந்த இரவு 8 மணிக்கு "அம்மா அம்மா" என்று கூப்பிடுக் கொண்டே தாம் பொலிடோல் குடித்ததாகக் கூறி வீடு வந்து வாந்தி எடுத்தார், உடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம், அங்கு மரணமானார்.

இறந்தவர் எழுதியதாகக் கூறப்படும் ஒரு கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

"எனது பெரிய தகப்பனிடம் ஒன்றரை வருடங்கள் வேலை செய்தேன். எனினும் மொத்தச் சம்பளமாக 50 ரூபாய் மட்டுமே கொடுத்தார். ஆனால் ஒன்றரை வருடத்துக்கும் சம்பளம் பெற்றுக்கொண்டதாக றிசீட்டில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்.

என்னை மகனைப்போல் அவர் நடத்தவில்லை. அடித்துத் துன்புறுத்தினார். சம்பளம் கேட்டபோதெல்லாம் கண்டித்தார்.

என்னுடைய நமக்கிரியைகளுக்கான செலவுக்கு அவர் எனக்குத் தரவேண்டிய பணத்தை வாங்கிச் செலவழிக்கட்டும். நான் தற்கொலை செய்ததற்கான பொறுப்பு முழுதும் என்னுடையதே."

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

தேவை

நல்ல ஆரோக்கியமும் தேகக் கட்டுமுள்ள காவற்காரர் தேவை. நேரில் மனுச்செய்க. அரஸ்கோ இன்டஸ்ரீஸ், நல்லூர், யாழ்ப்பாணம். 1589

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 55-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

ஈழநாடு சூறாவளி நிவாரண மாத உதவித்திட்டம்

சூறாவளி காரணமாக பலாலியில் உள்ள தலைவரை இழந்த குடும்பமொன்றுக்கு ஈழநாடு கஷ்ட நிவாரண நிதிச்சபையினர்சார்பாக திரு வி.ராஜசேகரம் நேரில் சென்று உதவிநிதி வழங்கியுள்ளார். விபரம் வருமாறு:

மாதாந்த உதவித் திட்டத்தின்கீழ் ஜனவரி பெப்ரவரி மாதங்களுக்கு உதவிபெற்ற குடும்பம்

மேரி பிலோமினு 50-00
கைம்பெண், 4 பிள்ளைகள், மூத்த பிள்ளை ஆண். வயது 5.

காங்கேசன்துறை

அத்தியாவசிய பொருள்தட்டுப்பாடு

காங்கேசன்துறை, செவ்

காங்கேசன்துறையிலுள்ள கடைகளில் தீப்பெட்டி, கொத்தமல்லி, புளி போன்ற அத்தியாவசிய சாமான்கள் இல்லாமல் பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஐக்கிய பண்டகசாலைகளிலும் இவை கிடைப்பதில்லையென புகார் கூறப்படுகிறது என்றும் இச் சாமான்கள்டில்கள்மார்க்கட் அதிக விலைக்கு விற்பனையாகிறது என்றும் ஒரு குத்தல் கொத்தமல்லி ரூபா 1-20 க்கு விற்பனையாகிறதென்றும் அறிவிக்கப்படுகிறது.

கல்வியங்காட்டில் படுகொலை

யாழ்ப்பாணம், செவ்.

கல்வியங்காட்டிலுள்ள ஒரு வீட்டில் கடந்த சனிக்கிழமை இரவு 90 வயது மூதாட்டியான அன்னப்பா என்பவர் படுகொலை செய்யப்பட்டாரென்றும், அவரது காதுகளிலிருந்த ஒருதோடு கழட்டி எடுக்கப்பட்டதென்றும், மற்றத்தோடு, பிடுங்கி எடுக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது.

நடராசாவின் மனைவியான அன்னம்மா அவ்வீட்டில் தனியாக வசித்து வந்தாரென்றும், சம்பவம் நடந்ததினம் அவர் வீட்டில் தனியாக இருந்தாரென்றும் கூறப்படுகிறது. அவரது வாய்க்குள் துணி திணிக்கப்பட்டிருந்ததென்றும், கைகால் கட்டப்பட்டிருந்ததென்றும், இச்சம்பவம் பற்றி மேலும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்பட்டில்லை யென்றும், தொடர்ந்து பொலிசார் புலன் விசாரணை செய்து வருவதாகவும் அறியப்படுகிறது.

200 வாளொலிகள்

(1ம பக்கத் தொடர்ச்சி)

யப்படுகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் சுமார் 200 வாளொலிப்பெட்டிகள் வழங்கப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது. மாவட்டத்துக்கென முன்னர் 60வாளொலிகள் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தன.

பொலிசார் அச்சம்

காங்கேசன்துறை, செவ்.

யாழ்ப்பாணம் பொலிஸ் விடுதியில் பொலிசார் தமது குடும்பங்களுடன் வசிக்கப்பயப்படுகின்றனர் விடுதியில் பூட்டியிருக்கும் மின்சார வயர்கள் அபாயகரமான நிலையில் அடிக்கடி திடீர்திடீரென அறுந்துவிழுவதே அச்சத்துக்குக் காரணம். இதற்கு முன்னும் ஒருவர் மின்சாரம்தாக்கி இறந்தது குறிப்பிடத்தக்கது இதுசம்பந்தமாக மேலதிகாரிகளிடம் புகார் செய்தும் பலனளிக்கவில்லையெனத் தெரிகிறது.

'பழைய சேவையாளர்களின் நிலைபற்றி ஆராய்க'

அரசாங்க லிகிதர் சேவை சங்கத்துக்கு கிளைச்சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

"எங்கள் அங்கத்தவர்களுக்கு அரசியல் உரிமை பெறுவதற்காக நீங்கள் எடுக்கும் முயற்சியையிட்டு நான் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதே உணர்ச்சியுடன் பழைய அரசாங்க சேவையாளர்களுடைய நிலையையும் வருடாந்த சம்பள உயர்ச்சியையும் பற்றி அரசாங்கத்துடன் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று யாழ். கிளை அரசாங்க லிகிதர் சேவை சங்கத்தின் காரியதரிசி திரு. சேபரமானந்தன் கொழும்பிலுள்ள தாய் சங்கத்திற்கு எழுதிய நீண்டகடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது பல ஆயிரம் அரசாங்க சேவையாளர்களுடைய வருடாந்தப்படி உயர்ச்சி கடந்த நாலு ஆண்டுகளாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 21 கோரிக்கைகளில் இந்த விஷயம் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் வசதியாகவுக் கும்நிலைக் கேற்பவும் தலைமைப்பீடம் இந்த 21 கோரிக்கைகளையும் அரசாங்கத்திற்கு சமர்ப்பிப்பதை பின்போட்டு விட்டது. காலஞ் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கைகளை இன்றைய தேர்தல் சூழ் நிலையில் நாம் ஆராய்ந்து கொண்டிருக்கும் பொழுது எங்களுடைய பிரதான கோரிக்கையான இந்த விஷயத்தையும் அரசாங்கத்துடன் கலந்துரையாடுதல் நன்மை பயப்பதாகும். சிங்கள மொழிச் சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவந்த பொழுது இச் சட்டத்தினால் ஒருவரும் பாதிக்கப்படமாட்டார்கள் என்று காலஞ்சென்ற பிரதமர் உறுதி கூறியிருந்தார். ஆனால் அதற்கு எதிராக இந்த சிங்களச்சட்டம் எங்கள் வயிற்றில் அடித்துவிட்டது. எங்களுடைய இந்தக் கோரிக்கையை சமர்ப்பிப்பதினால் பல ஆயிரக்கணக்கான அரசாங்க உத்தியோகத்தர்களும் அவர்களுடைய குடும்பங்களும் இந்த தேர்தல் சமயத்தில் நன்மை பெறுவார்கள் இந்த கோரிக்கைக்காக எங்களுடன் தோளோடுதோள் நின்று போராடிய மூன்று மந்திரிமார்கள் மந்திரி சபையில் இருக்கும் பொழுது இந்தக் கோரிக்கையை நாம் இலகுவில் பெற்றுவிடலாம்"

திருமதி விவியன் யாழ். வருகை

யாழ்ப்பாணம், புதன்

திரு. பீட்டர்கெனமனும் கலாசார உதவிமந்திரி திருமதி விவியன் குணவர்த்தனவும் இன்று யாழ்ப்பாணம் வருவதாகத் தெரிகிறது.

திரு. என். சண்முகதாசன் 20-ந் திகதியும் திரு. பாரதம்பு 27-ந் திகதியும் இங்கு வரவிருக்கின்றனர்.

திருவள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், புதன்

வியாழக்கிழமை பிற்பகல் ஆறு மணிக்கு காரைநகர் சைவ மகாசபை மண்டபத்தில் திருவள்ளுவர் திருநாள் நடைபெறும். பண்டிதை திருமதி சத்தியதேவி துரைசிங்கம் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்னும் பொருள் பற்றிச் சொற்பெருக்காற்றுவார்.

மற்றுமொரு சீன அணுகுண்டு

கான்பரா, பெப். 16

1967-ம் ஆண்டில் கம்யூனிஸ்ட் சீனா இரண்டாவது அணுக்குண்டை தயாரித்துவிடுமென ஆஸ்திரேலியா செய்தியொன்று கூறுகிறது.

இன்னும் 5 வருடத்தில் சீனா ஹைதரயன் குண்டொன்றை வெடிக்குமென்று இச் செய்தி மேலும் கூறுகின்றது.

வினோபா....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டாது என்று இன்று பல போக்குவரத்துப் பகுதி அறிவித்தது.

சுப்பிரமணியம் அழகேசன்

மொழிக்கிளர்ச்சி காரணமாக அண்மையில் ராஜினாமா செய்த மத்திய உணவு மந்திரி திரு. சி. சுப்பிரமணியமும், பெட்ரோலியம் இரசாயன மந்திரி திரு. அழகேசனும் இன்று பிரதமர் திரு. சாஸ்திரியை தனித்தனியாகச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர். இன்று நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்திலும் இவர்களிருவரும் ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

காமராஜர் யோசனை

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜர் இன்று டாக்டர் ராதாகிருஷ்ணனைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். சாஸ்திரியுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

மொழிச்சட்டம் திருத்தப்படவேண்டும்

இந்தியாவில் அண்மையில் நடைபெற்ற மொழிக் கிளர்ச்சி குறித்து திரு. காமராஜர் இன்று தெரிவிக்கையில் காலம் சென்ற நேருஜியின் உறுதிமொழிகளுக்கு சட்டம் மூலம் வடிவம் கொடுப்பதற்கு, அரசகரும மொழிச்சட்டத்தை திருத்துவது நல்லது என்று கூறினார். ஹிந்தி மொழி பேசாத மக்களுக்கு பாதுகாப்பளிப்பதற்கு இப்படியான முறையில் சட்டம் திருத்தப்படுவது சிறந்ததாகும் என்றும் திரு. காமராஜர் தெரிவித்தார்.

இதற்காக அரசியல் சாஸனத்தை திருத்தத் தேவையில்லை என்றும் திரு. காமராஜர் கூறினார்.

சாஸ்திரி ஆலோசனை

பிரதமர் சாஸ்திரி இன்று மத்திய மந்திரிகளுடனும் துணை மந்திரிகளுடனும் 75 நிமிட நேரம் ஆலோசனை நடத்தினார். பகல் நடைபெற்ற மந்திரிசபைக்கூட்டத்தில், தென்னாட்டு கிளர்ச்சி குறித்து தீவிரமாக ஆலோசிக்கப்பட்டது இம்மாதம் 23, 24-ந் திகதிகளில் நடைபெறும் முதன் மந்திரிகள் மகாநாட்டில் உத்தியோகமொழி பற்றி செய்துகொள்ளப்படும் முடிவைத் தொடர்ந்து அரசாங்கத்தின் மொழிக்கொள்கை பற்றி இறுதியாக அறிவிக்கப்படும் என்று பிரதமர் கூறினார்.

வினோபாஜிக்கு முதன் மந்திரிகள் தந்தி

உத்தியோக மொழி குறித்து வினோபாஜி தெரிவித்திருந்த மூன்று அம்ச திட்டத்தைத் தாங்கள் ஏற்றுக்கொண்டதாக பத்து முதன்மந்திரிகள் வினோபாஜிக்கு தந்தி மூலம் அறிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org